பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 03 வியாழக்கிழமை 16.01.2025 கதிர் 069

## இனி இது ரகசியம் அல்ல!

அயலுறவுத்துறை விவகாரத்தில் ஆளும்தரப்பு இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. புவிசார் அரசியல் போட்டியின் நடுவில், குறிப்பாக ☞ 2

# அபிவிருத்தியின் புதிய யுகத்திற்காக இலங்கையுடன் இணையத் தயார்

## சீன ஜனாதிபதி அநுரவிடம் உறுதியளிப்பு

அபிவிருத்தியின் புதிய யுகத்திற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயார் என்று சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவிடம் உறுதியளித்தார்.

சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்விற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று சீன மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது.

சீன மக்கள் மண்டபத்திற்கு ☞ 2



## சுற்றுலாத்துறை வருமானம் 50 சதவீதம் வரை அதிகரிப்பு

2024 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த சுற்றுலாத்துறை வருமானம் 53.2% அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில், 1,487,303 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில், இதனூடாக பதிவுசெய்த மொத்த வருமானம் 2,068 மில்லியன் டொலர்கள் ஆகும்.

2024 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2,053,465 ஆக ☞ 2

## பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு இந்திய குடியரசு தின அழைப்பு

இந்திய உயர்ஆணையத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் ஆனந்த் முகுந்தன் மற்றும் உதவி பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேர்னல் மந்தீப் சிங் நேகி ஆகியோர் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவை (ஓய்வு) சந்தித்து கலந்துரையாடினர்.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இந்த இருதரப்பு சந்திப்பின்போது, ஜனவரி 26 ஆம் திகதி இந்தியாவின் 76ஆவது குடியரசு தின கொண்டாட்டங்களில் பங்குபற்ற பாதுகாப்புத்துறை பிரதி அமைச்சருக்கு உத்தியோகபூர்வ அழைப்பும் கையளிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் போது இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் ☞ 8

## தமிழ் மொழிப் பாரம்பரிய மாதமாக ஜனவரியை அறிவிக்க கோரிக்கை

### அமெ. நாடாளுமன்றில் தீர்மானம் அறிமுகம்

அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஜனவரி மாதத்தை தமிழ்மொழி மற்றும் பாரம்பரிய மாதமாக அறிவிக்கக் கோரி தீர்மானம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்திய வம்சாவளியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ராஜா கிருஷ்ணமூர்த்தி. தலைமையில் ரோ கன்னா, அமி பெரா, ஸ்ரீ தானேதர், பிரமிளா ஜெயபால், சுஹாஸ் சுப்பிரமணியம் உள்பட 15 உறுப்பினர்கள் இத்தீர்மானத்தை அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக ராஜா கிருஷ்ணமூர்த்தி கூறுகையில், "ஒரு தமிழ்-அமெரிக்கராக, அமெரிக்காவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மொழி, பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தை மதிக்கும் இந்த இரு கட்சி தீர்மானத்தை அறிமுகப்படுத்துவதில் நான் பெருமைப்படுகிறேன். அமெரிக்கா என்பது பல்வேறு மொழிகள், கலாச்சாரங்கள், கருத்துக்கள் மற்றும் மரபுகளின் ஒரு அங்கமாகும்.

இந்தத் தீர்மானம் 3.5 லட்சத்துக்கும் மேற்பட்ட ☞ 8

## கொள்கலன் அனுமதி தாமதத்தால் 30 கப்பல்கள் திரும்பிச் சென்றன

கொள்கலன்களை அனுமதிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நாட்டிற்கு வந்த சுமார் 25 அல்லது 30 கப்பல்கள் திரும்பிச் சென்றுள்ளன என தெரிவிக்கப்படுவதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித் ருவான் கொடிதுவக்கு தெரிவித்தார்.

ஒருகொடவத்தை சுஊவு முற்றத்தில் நேற்று கண்காணிப்பு சுற்றுப்பயணத்தில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அனுமதிப்பதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து விவாதித்து உடனடித் தீர்வுகளைக் காண, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, சுங்க அதிகாரிகள் வாரத்தில் 7 நாட்களும், 24 மணி நேரமும் வேலை செய்ய ஒப்புக்கொண்டனர். ☞ 2

## 13இல் கைவைக்க மாட்டோம் அமைச்சர் சந்திரசேகர் உறுதி

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தினை தமிழ் மக்கள் தமக்குக் கிடைத்த உரிமையாகக் கருதுகின்ற நிலையில் அதில் கைவைப்பதற்கு நாங்கள் முனையவில்லை என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த அவர் தமிழ்நாட்டுத் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக நாங்கள் என்ன கருதுகின்றோம் என்பதை விடவும் தமிழ் மக்கள் ☞ 2

## இந்தியாவிடமிருந்து பொலிஸுக்கு 'கப்' வண்டிகளைப் பெற ஒப்பந்தம்

இலங்கையின் பொலிஸ் நிலையங்களில் பயன்படுத்த சிங்கிள் கப்ரக வண்டிகளை வழங்குவதற்காக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

இலங்கை மக்களின் தேவைகள் மற்றும் ஆளும்தரப்பின் முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்ட இந்தியாவின் மக்கள் மையப்படுத்தப்பட்ட மேம்பாட்டு ஒத்துழைப்பு முயற்சிகளின் கீழ், நாட்டின் 25 மாவட்டங்களிலும் வீட்டுவசதி, சுகாதாரம், கல்வி, மீன்வளம், ☞ 2

### நாடாளுமன்றத்தில் உள்ள

## எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஊடக மற்றும் ஆய்வு பிரிவு தொடக்கம்

நாடாளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சிகளின் வகை பொறுப்புக்களை மேற்கொள்ளும்போது, தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக புதிய முறைமை ஒன்றை செயற்படுத்துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நடவடிக்கை எடுத்துள்ளார். ☞ 8

## இஸ்ரேலியப் படையினருக்கு நுழைவு விசா வழங்காதீர்கள்

### தேசிய ஷூரா சபை அநுரவுக்கு கடிதம்

இலங்கைக்கு வந்த இஸ்ரேலியர்களுக்கு எதிராக ஏற்கனவே கூறப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரியுள்ள தேசிய ஷூரா சபையானது, இஸ்ரேலியப் ☞ 8

## தூய சிறீலங்கா பெப்ரவரி முதலே ஆட்சியாளர்களால் முன்னெடுப்பு

### தொழில் பிரதி அமைச்சர் விளக்கம்

இடம்பெறும் சிறிய சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டு எமது ஆட்சியை யாரும் மதிப்பிடக் கூடாது. இந்த ஆட்சியை எந்த சந்தர்ப்பத்திலும் மீள திருப்புவதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம். அத்துடன் 'தூய சிறிலங்கா' வேலைத்திட்டம் பெப்ரவரியிலே ஆரம்பிக்கும் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

அவர் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஒருசில ஊடகங்கள் ஆளும்தரப்பினால் மேற்கொள்ளப்படும் எந்த நல்ல விடயத்தையும் பிரசுரிப்பதில்லை. எமது குறைபாடுகளை மாத்திரமே ஒளிபரப்பி வருகின்றன. ஆளும்தரப்பு ஊடகங்களை அடக்குவதாகவும் தெரிவிக்கின்றனர். நாங்கள் ஒருபோதும் ஊடகங்களை அடக்குவதற்கு முற்படப்போவதில்லை. நாங்கள் எப்போதும் ஊடகங்களுடன் சிநேகபூர்வமாகச் செயற்பட்டவர்கள், செயற்படுபவர்கள். இந்த ஆட்சியை எந்தச் சந்தர்ப்பத்திலும் மீள திருப்புவதற்கு இடமளிக்கக்கூடாது. இடமளிக்கவும் மாட்டோம்.

ஆளும்தரப்பு பெரும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துவரும் ☞ 2

## சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை மேம்படுத்தும் திட்டம் செயற்படுகிறதா?

### முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் கேள்வி

சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட கடனுதவியைப் பயன்படுத்தி அந்நோக்கத்தை அடைவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா? என முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரளவு வணிக முயற்சியாண்மைகளுக்கு உதவுவதுடன், அவற்றை விரிவுபடுத்துவதற்கு அவசியமான ☞

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சீனாவிற்கும்இந்தியாமற்றும்மேற்குலகிற்கும் இடையேயான போட்டியினைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு முன்னேறும் இலங்கையின் அணுகுமுறையில் இந்த மூன்று தரப்புக்களுமே ஆளும்தரப்பில் உள்ளவர்களைத் தமது நலன்களுக்காக வளைத்துப்போடாமல் இருப்பதை உறுதி செய்வதுடன், நாட்டின் அயலுறவுக் கொள்கையை பக்கச்சார்பற்றதாக உறுதி செய்வதிலும் ஆளும் தரப்பு உறுதியாக இருப்பதாகத் தெரிகின்றது.

இதனால் அயலுறவுத்துறை தவிர்ந்து அமைச்சர்களோ மாகாண ஆளுநர்களோ வெளிநாட்டுத் தூதுவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கும் ஆளும்தரப்புக் கடும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில்ஜனாதிபதிசெயலகத்தினால் ஜனவரி முதலாம் திகதி முதல் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்தச் சுற்றறிக்கையில், வெளிநாட்டு தூதுவர்களோ வெளிநாட்டுகளில் இருந்து விசேட அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகளோ வரும்போது அவர்கள் அமைச்சர்கள்மற்றும்ஆளுநர்களுடன்நடத்தும் பேச்சுக்களில்வெளிவிவகாரஅமைச்சுஅதிகாரி ஒருவரும் கட்டாயம் உடனிருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புக்களில் என்ன பேசப்படுகின்றது என்பதை அந்த அதிகாரி கேட்டுக்கொண்டிருந்து அயலுறவுத்துறை அமைச்சருக்கு அது பற்றி அறிக்கையிடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவோ அல்லது ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடவோ எந்த ஓர் அமைச்சருக்கும் ஆளுநருக்கும் அதிகாரம் கிடையாது என்றும் அந்தச் சுற்றறிக்கை தெளிவாகக் கூறுகின்றது.

அத்துடன் இலங்கையில் இருக்கும் வெளிநாட்டு தூதுவர்கள் அமைச்சர்களை சந்திப்பதாக இருந்தால், அதற்கு வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்து நேரம் ஒதுக்கிக்கொள்ள வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் சுற்றறிக்கையில் வெளிநாட்டு தூதுவர்கள் அல்லது வெளிநாட்டு அதிகாரிகளால் வழங்கப்படும் இரா போசன நிகழ்வு மற்றும் விழாக்களுக்கான அழைப்புகளை அமைச்சர்கள் யாரும் ஏற்றுக்கொள்வதில்லைஎனஉறுதிப்படுத்தும்படி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். இந்த சுற்றறிக்கையைப் பார்க்கும்போது சிரிப்பு வருவதாகவும், அதேநேரம் கவலையாக இருக்கிறது என்றும் இவ்வாறான கட்டுப்பாடுகள் வட கொரியாவில்கூட இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தூதரகங்களினதும் அவற்றின்அதிகாரிகளினதும்ஊடாட்டங்களால் தமது அமைச்சர்களும் ஆளுநர்களும் அதீத செல்வாக்குக்கு உள்ளாகி தமக்கே சிக்கலாக மாறிவிட்டுவார்களோ என்கிற அச்சம் ஆளும்தரப்புக்கு வந்துவிட்டது போன்று தோன்றுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அபிவிருத்தியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் அமோக வரவேற்பளித்தார், மரியாதை வேட்டுக்களுடன் மிகுந்த கௌரவமான முறையில் வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து இருதரப்பு அரச தலைவர்களுக்கும் இடையில் சுமூகமான கலந்துரையாடலைத் தொடர்ந்து இரு தரப்பு கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அபிவிருத்தியின் புதிய யுகத்திற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி இதன் போது வலியுறுத்தினார்.

அத்தோடு நெருங்கிய நட்பு நாடுகள் என்ற வகையில் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த சீன ஜனாதிபதி ஷி ஜிங்பிங் , எதிர்காலத்தில் இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

சீனாவிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இலங்கை அரசாங்கம் ஒரே சீனா கொள்கையை ஆதரிப்பதாக சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிடம் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு சீனாவில் உள்ள மக்கள் மண்டபத்தில் உள்நாட்டு நேரப்படி மாலை 5:00 மணிக்கு நடைபெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச்சந்திப்பின்போது, இருநாடுகளுக்கும் இடையில் முக்கியத்துவம் வாய்ந்த பல பிரச்சினைகள் குறித்து இருதரப்புக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளது.

அங்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்ததாவது:

சீனாவின் பொருளாதாரம், தொழில்துறை மற்றும் தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மனித மேம்பாட்டில் அடைந்துள்ள மகத்தான முன்னேற்றத்தில் இலங்கை மிகவும் மகிழ்ச்சியடைகிறது.

எமது அரசாங்கம் இருதரப்பு மற்றும் பலதரப்பு உட்பட அனைத்து துறைகளிலும் ஒரே சீனா கொள்கையை ஆதரிக்கிறது.

பல தசாப்தங்களாக இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சீனா முக்கிய பங்கு வகித்து வருகிறது, மேலும் இந்த விஜயம் நமது நாடுகள் மற்றும் மக்களின் பரஸ்பர செழிப்பை வலுப்படுத்தும் என்று நம்புகிறேன்- என்றார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார, சமூக மற்றும் கைத்தொழில்துறை சார்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்த சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அரச தகவல் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே. ஜே. பண்டார ஆகியோரும் பங்கேற்றனர்.









## சுற்றுலாத்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவான நிலையில், இதனூடாக இலங்கை 3,168.6 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பதிவு செய்துள்ளது. இது ஆண்டுஅடிப்படையில்53.2%வளர்ச்சியாகும்.

2024 டிசெம்பரில் சுற்றுலாத்துறை வருமானம் 362.1 மில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளது. 2023 டிசம்பரில் இதன் மதிப்பு 269.3 மில்லியன் டொலர்களாக பதிவானதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

## கொள்கலன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து, அனுமதி வழங்கும் செயல்முறை தற்போது நடைபெற்று வருவதாக கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், ஒருகொடவத்தை சுங்க முற்றத்திற்கு அருகில் வரிசைகள் இன்னும் காணப்படுகின்றன. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தீர்வு முகவர்கள் சங்கம், அனுமதி செயல்முறையை விரைவுபடுத்த, இந்த செயல்முறையுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் 24 மணி நேர சேவையை வழங்கவேண்டும்என்றுசுட்டிக்காட்டியுள்ளது.

## சிறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்புக்களை வழங்கும் நோக்கில் கடந்த வருடம் மார்ச் மாதம் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 100 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்கியிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அக்கடனுதவி வழங்கப்பட்டதன் நோக்கத்தை அடைவதை முன்னிறுத்திய அமுலாக்க செயன்முறைகள் தற்போது எம்மட்டத்தில் உள்ளனவா? என முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அவரது 'எக்ஸ்' தளப்பதிவின் ஊடாகக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 சதவீதம் பங்களிப்புச்செய்யும் சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்கள், எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்வதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் ஷெஹான் சேமசிங்க, அதனூடாக சுமார் 45 சதவீதமானோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

"சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்ட எமது ஆளும்தரப்பு, அதற்குரிய அங்கீகாரத்தை வழங்கும் நோக்கில் சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களுக்கான கடன் உத்தரவாதக் கட்டமைப்பை உருவாக்கினோம்.

அமைச்சரவையினதும், நிதியமைச்சின் கீழ் இயங்கிவரும் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினதும் அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட சில வர்த்தக வங்கிகள் மற்றும்நிதிநிறுவனங்களுடன்ஒருங்கிணைந்து ஆசிய அபிவிருத்தி வங்கி ஒத்துழைப்பு வழங்கியது'' எனவும் முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் மேற்குறிப்பிட்ட நோக்கத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட கடனுதவியைப்பயன்படுத்தி அந்நோக்கத்தை அடைந்துகொள்வதற்குரிய அமுலாக்க செயன்முறை முன்னெடுக்கப்பட்டுவருகிறதா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## 13இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ன நினைக்கின்றார்கள் என்பதுதான் முக்கியமான விடயமாகும்.

தமிழ்மக்கள்13ஆவதுதிருத்தச்சட்டத்தினை தமக்குகிடைத்தஉரிமையாககருதுகின்றார்கள் என்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்துள்ளது. அதனடிப்படையில்தான் நாம் எமது தேர்தல் அறிக்கையில் அதனை உள்ளீர்த்திருந்தோம்.

அதுமட்டுமன்றி, 13ஆவது திருத்தச் சட்டம் நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசமைப்பிலும் காணப்படுகின்றது. அந்த வகையில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்பட்டதும் இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

மேலும், தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுக்கும் விடயமாக 13ஆவது திருத்தச் சட்டத்தினையும், மாகாண சபை முறைமையும் கருதுகின்றபோது அதனை அர்த்தபுஷ்டியான நிருவாகக் கட்டமைப்பாக செயற்படுத்திப் பார்ப்பதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

ஆகவே 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில் எமதுநிலைப்பாட்டைவிடவும்தமிழ்மக்களின் நிலைப்பாடே முக்கியமானது. அதேநேரம், தோழர் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பானது அனைத்து மக்களின் ஆணையுடனேயே ஆட்சிப்பொறுப்பினைப் பெற்றுள்ளது.

இதனால், அது அனைத்து மக்களுக்கான ஆளும்தரப்பாகச் செயற்படவுள்ளதோடு, மக்கள் நலன்களுக்கே முக்கியத்துவம் அளிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார்.

## இந்தியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வாழ்வாதாரம், விவசாயம் போன்ற பல துறைகளில்மக்களின்அன்றாடவாழ்க்கையில் ஒரு உறுதியான மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த மேம்பாட்டு உதவி முயற்சிகளில் மற்றொரு அத்தியாயத்தைச் சேர்க்கும் வகையில் இந்திய ஆளும்தரப்பின் 300 மில்லியன் ரூபாய் மானிய உதவியுடன் 'இலங்கையில்உள்ளபொலிஸ்நிலையங்களில் பயன்படுத்துவதற்காக சிங்கள் கப் ரக வண்டிகளைவழங்குதல்' குறித்தபுரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா மற்றும் பொதுபாதுகாப்புமற்றும்நாடாளுமன்றவிவகார அமைச்சகத்தின் செயலாளர் டி.டபிள்யூ.ஆர்.பி. ஆகியோரால் கையெழுத்திடப்பட்டு பரிமாறிக் கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொதுப் பாதுகாப்பு மற்றும்நாடாளுமன்றவிவகாரங்கள்அமைச்சு, இலங்கை பொலிஸ் மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சு ஆகியவற்றின்அதிகாரிகள்கலந்துகொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு குறைந்தது 80 சிங்கள் கப் ரக வண்டிகள், உதிரி பாகங்கள், துணைக் கருவிகளைவழங்குவதைஉள்ளடக்குவதோடு மக்களின்பாதுகாப்பைமேம்படுத்துதல்மற்றும் சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் தொடர்பான இலங்கைபொலிஸாரின்முக்கியத்தேவையை நிவர்த்தி செய்யும்.

## தூய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், சிறிய சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டு எமது ஆட்சியை மதிப்பிடக்கூடாது. முச்சக்கரவண்டி, பஸ் வண்டிகளில் மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றுதல் அல்லது அரிசி பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு எமது ஆட்சியை மதிப்பிட வேண்டாம்.

ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதி தலைமையில் நாங்கள் 'தூய சிறிலங்கா' வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம். இந்த மாதம் முழுவதும் இந்த வேலைத்திட்டம் குறித்து அறிவுறுத்தும் நடவடிக்கையே இடம்பெறுகிறது. இருப்பினும் இலங்கை பொலிஸ், 'தூய சிறிலங்கா' வேலைத் திட்டம் ஆரம்பித்துள்ளதாக சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ஆனால் நாங்கள் இதனை பெப்ரவரியிலேயே ஆரம்பிக்கிறோம். தற்போது அறிவுறுத்தும் நடவடிக்கையே இடம்பெறுகிறது. ஆனால், பொலிஸார் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டு முச்சக்கரவண்டி, பஸ்வண்டிகளின் மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றும்போது, 'தூய சிறிலங்கய் என்பது இதுதானா என மக்கள் எண்ணத் தொடங்கியுள்ளனர்.

'தூய சிறிலங்கய் என்பது இதுவல்ல. அது பெரும் வேலைத்திட்டம். அது படிப்படியாக முன்னெடுக்கப்படும்போது மக்கள் எங்களை விளங்கிக்கொள்வார்கள் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அமெ. எங்களை அழைத்தால் வோஷிங்டனுக்கு சென்று எம் பிரச்சினையை எடுத்துரைப்போம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு




அமெரிக்க நிர்வாகம் எங்களை அழைத்தால், வொஷிங்டனுக்குச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத்தயாராகஉள்ளோம்எனகாணாமல் ஆக்கப்ட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

வவுனியாவில் பிரதான தபாலகத்திற்கு அருகில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பொங்கல் நாளான நேற்று (செவ்வாய்க்கிழமை) கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இப் போராட்டத்தின் பின் தொடரந்தும் கருத்து தெரிவித்த சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் -

இன்று(நேற்று) தைப் பொங்கல். இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் நாள். விவசாயத்திற்கு இன்றியமையாத சூரிய ஒளியை வழங்கிய சூரியனுக்கு (சூரியக் கடவுள்) நமது நன்றியைத் தெரிவிக்கும் விதமாக இந்த நாள் தை பொங்கல் 2025. நாங்கள் நம்பிக்கையை கொண்டாடுகிறோம். டிரம்பைவாழ்த்துகிறோம். நீதி மற்றும் இறையாண்மைக்கான தமிழர் போராட்டங்களை பெருக்குகிறோம்.

அறுவடையில் முக்கியப் பங்காற்றிய மழை, கால்நடைகள் மற்றும் பூமிக்கு விவசாயிகள் நன்றி தெரிவிக்கின்றனர். இந்த இனிய தருணத்தில் அனைவருக்கும் தைப் பொங்கல் நல்வாழ்த்துக்களை தாய்மார்கள் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

தமிழர்களுக்கு இந்த மகத்தான நாளில், 2025 ஆங்கில புத்தாண்டையும் வரவேற்கிறோம். எவ்வாறாயினும், இந்த நாள் ஒரு சோகமான மைல்கல்லையும் குறிக்கிறது. தமிழ் தாய்மார்கள் தங்கள் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை மீண்டும் பெறும் வரை இடைவிடாத போராட்டத்தின் 2886 ஆம் நாள் இன்று. வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக ஏ-9 வீதியில் நிற்கும் இந்த தைரியமான தாய்மார்கள் சத்தியம் மற்றும் நீதிக்கான கோரிக்கையை தொடர்ந்தும் முன்வைக்கின்றனர். தங்களின் அன்புக்குரியவர்களை வெளிக்கொணர்வதும், எதிர்கால இனப் படுகொலைகளைத் தடுப்பதும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச ஆதரவைப் பெறுவதும் தாய்மாரின் நோக்கம்.

நவம்பர் தேர்தலில் வெற்றி பெற்ற அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப்பை வாழ்த்துகிறோம். 'அவன் இல்லாமல் ஓர் அணுவும் அசையாது' என்பது பழைய தமிழ் பழமொழி. அதேபோல், அமெரிக்கா மற்றும் அதன் ஜனாதிபதியின் தலைமை இல்லாமல், உலகம் அரசியல் ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ நகர முடியாது.

மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சுதந்திர உலகின் தலைவர் டொனால்ட் டிரம்ப். அவரது வரவிருக்கும் காலத்தில், அமெரிக்காவின் தீர்க்கமான நடவடிக்கைகளால் உந்தப்பட்ட வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம். உதாரணமாக பனாமா கால்வாய், கிரீன்லாந்து மற்றும் கனடா தொடர்பான டிரம்பின் கடந்தமாத அறிக்கைகள், அவரது கவனம் இலங்கை உட்பட தெற்காசியாவை நோக்கி விரைவில் திரும்பக்கூடும் என்று நம்மை சிந்திக்க வைக்கிறது.

உலகில் வளர்ந்து வரும் சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிரானதனது நிலைப்பாட்டில் அமெரிக்கா தெளிவாக உள்ளது. சீனாவுக்கான ஆதரவு வெளிப்படையாகத் தெரிந்த இடங்களில், அரசியல் அல்லது கட்டமைப்பு மாற்றங்கள் பின்பற்றப்படலாம்.

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தமிழர்களாகிய நாம் வரவேற்கின்றோம். அவரது நிர்வாகம் எங்களை அழைத்தால், வொஷிங்டனுக்குச் சென்று, காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார்தமது பிள்ளைகளது படங்களையும், அமெரிக்காமற்றும்ஐரோப்பயஒன்றியத்தின் கொடிகளையும் தாங்கியவாறு கண்ணீர் மல்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





# வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் பக்திப் பாடல்களுடன் தைப்பொங்கல் நிகழ்வு

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் பக்திப்பாடல்கள் இசைக்க மழைக்கு மத்தியிலும் தைப்பொங்கல் திருநாள் சிறப்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்பட்டது.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய சமுதாயப் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் சிவில் பாதுகாப்பு குழுவினரின் பங்களிப்புடன் சிறப்பான முறையில் புதுப்பாணையில் புத்தரிசிப் பொங்கல் இடம்பெற்றது.

இப்பொங்கல் நிகழ்வில் மதத் தலைவர்கள், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ண, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் வவுனியா பிரதேசங்களை சேர்ந்த சமுதாய பொலிஸ் பிரிவின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


100

# இரணைமடு குளத்தில் யானை உயிரிழப்பு

## துர்நாற்றம் வீசுவதாக மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கரைப்பகுதியில் 15 நாள்களாக காயத்துடன் காணப்பட்ட யானை உயிரிழந்துள்ளது.

குறித்த யானை காயத்துடன் அவதிப்படுவதாக தாம் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தெரிவித்தும் அவர்கள் வருகை தந்தபோதும் உரிய சிகிச்சை வழங்கவில்லை தற்பொழுது இறந்த யானையின் உடலில் துர்நாற்றம் வீசி வருகிறது என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.



இறந்த சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் பார்வையிட்டனர்.

113

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்திய, தமிழ்நாடு அரசுகள் கவனம் செலுத்துமா?

இந்திய மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளைக் கைவிடுவதற்கு தமிநாடு ஆளும்தரப்பும், புதுடில்லியும் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற அயலகத்தமிழர் மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த அவர் அங்கு மீனவர் தொழிற்சங்க அங்கத்தவர்களை சந்தித்தமை தொடர்பில் கொழும்பு திரும்பியதும் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்திருந்தார்.

“அயலகத்தமிழர் மாநாட்டில் கலந்துகொண்ட நான் தமிழ்நாட்டின் பல மீனவத் தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்களைச் சந்தித்து கலந்துரையாடினேன். இந்திய மீனவர்கள் இலங்கையின் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து தொழிலில் ஈடுபடுவதாலும், தடைசெய்யப்பட்ட இழுவை மடிப் படகுகளைப் பயன்படுத்துவதாலும் பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதை எடுத்து விளக்கினேன்.

எமது அடுத்த தலைமுறைக்குச் சொந்தமான வளங்கள் நிறைந்த இலங்கைக் கடற்பரப்பினையே அவர்கள் நாசமாக்கிக் கொண்டிருகின்றார்கள். இந்தச் செயற்பாட்டுக்குப் பெருமளவான தமிழக மீனவர்களே எதிர்ப்பு வெளியிடுகின்றார்கள். ஆனால் குறிப்பிட்ட சிலர் தான் அவ்விதமாகச் செயற்படுகின்றார்கள்.

குறிப்பிட்ட சிலர் வளங்கள் நிறைந்த இலங்கைக் கடற்பரப்பினை நாசமாக்குவதால் பாதிக்கப்படுவது வடக்கில் உள்ள தமிழர்கள்தான். அவர்கள் மூன்று தசாப்தமாகப் போருக்கு முகங்கொடுத்தவர்கள் தமது வாழ்வாதாரத்தினை மீண்டும் உயர்த்துவதற்கு முனைந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே தமிழ்நாடு ஆட்சியாளர்களும் டில்லியில் உள்ள அதிகாரிகளும் முதலில் சட்டவிரேதமான மீன்பிடி முறைமைகளை நிறுத்துவதுற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அதேநேரம், தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சரையும், தொழிற்சங்க பிரதிநிதிகளையும், டில்லியில் உள்ள அதிகாரிகளையும் அடுத்துவரும் காலத்தில் சந்தித்து உரையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்” என்றார் அமைச்சர்.

அவரது கருத்து உண்மையானது. அதில் மாற்றுக் கருத்துக்களில்லை. கடந்த 20 வருடங்களாக வடக்கு மீனவர்களும் இதனையே வலியுறுத்தி வருகின்றார்கள். இந்திய இழுவைமடிப் படகுகள் இலங்கையின் கடல் வளத்தைச் சிதைப்பது மட்டுமல்ல வடக்கு வாழ் மீனவர்களின் வாழ்வாதாரமான வலைகளையும் தொடர்ந்து சேதப்படுத்திவருகின்றார்கள். இவ்வாறு சேதப்படுத்தப்படும் வலைகளுக்காக எமது மீனவர்களுக்கு இழப்பீடுகூடக் கிடைக்காது அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். போர், பின்னர் கொரோனா பெருந்தொற்று, அதன் பின்னர் பொருளாதார நெருக்கடி என்று தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் வடக்கு மீனவர்கள் கொஞ்சமாவது தலையெடுத்துவிடலாம் என்று நம்பிக்கைகொள்ளும்போதெல்லாம் இப்படி இந்திய மீனவர்களாலும் வலைகளை இழந்து பாதிக்கப்படும்போது விரக்தியடைந்துவிடுகிறார்கள். எனவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படுவது அவசியம்.

ஆனால், யதார்த்தத்தில் அப்படி நடப்பதாக இல்லை. மீனவர்கள் பிரச்சினை குறித்துப் பேசத் தொடங்கி இப்போது இரண்டரை தசாப்தகாலமாகிவிட்டது. எந்த முன்னேற்றமுமில்லை. பதிலாக சட்டவிரோத மீன்பிடி முறையில் இந்திய மீனவர்கள் மேலும் பலமானவர்களாக மாறிவருகின்றார்கள். இந்தப் பிரச்சினையின் தொடக்க காலத்தில் அவர்களிடம் இருந்த படகுகளைவிட இப்போது பெரியதும் சிறந்த பொறிமுறைகளைக் கொண்டதுமான படகுகளுக்கு மாறி அவர்கள் சட்டவிரோத மீன்பிடியை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், அவர்களை இந்த மீன்பிடி முறைக்குப் பதிலாக ஆழ்கடல் மீன்பிடிக்குப் பழக்கப்படுத்த வேண்டும் என்பது தொடர்பில் 10 ஆண்டுகளுக்கு முன்னரே இணக்கங்கள் காணப்பட்டன. அது நடைபெறவில்லை.

இந்திய மற்றும் தமிழ்நாடு அரசுகள் மனம்வைத்து தமிழ்நாடு மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடிக்குத் திசை திருப்பாதவரையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைப்பது அரிது. எனவே இரு அரசுகளும் இந்திய மீனவர்களுக்கான மாற்றுவழிகளைக் கண்டறிந்து அதில் அவர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுப்பதே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழி. வடக்கு மீனவர்களின் நலனின் அக்கறை செலுத்தி அவர்கள் இதனை நடைமுறைப்படுத்தவேண்டும்.

# நாளொன்றுக்கு 2500 கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பு

## அமைச்சர் ஆனந்த விஜேபால தகவல்

நளொன்றுக்கு2,500கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்களின் புதிய கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது புதிப்பிப்பதற்கோ சுமார் மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டுள்ளது.

அவசரமாக வெளிநாடு செல்ல வேண்டியிருந்தால், அவ்விதமான தேவையுடைய நபர் எவ்விதமாக கடவுச்சீட்டைப்பெற்றுக்கொள்ள முடியும் என்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

தற்போது நாளொன்றுக்கு 1,100 கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கடவுச்சீட்டுக்களை புதிப்பிப்பதற்கோ அல்லது புதிதாக பெறுவதற்கோ இணையவழியின் மூலமாக நேர ஒதுக்கீட்டைச் செய்வதற்கு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் குழுவொன்றால் மதிப்பாய்வு செய்யப்படும். அந்த வகையில் கடவுச்சீட்டுக்களை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

இதேநேரம், அவசரமாக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் கடவுச்சீட்டுக்களை பெறுவதற்கு பிரத்தியேக முறைமையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக அவசர தேவையுடைவர்களின் நியாயமான காரணங்கள் ஆராயப்பட்டு கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. - என்றார்.

# தொடர் மழையால் வயல்கள் மட்டக்களப்பில் கடும் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக தாழ்நிலங்களும், வயல் நிலங்களும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவு பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட, மண்டூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்டு செய்கை பண்ணப்பட்டுள்ள பெரும்போக வேளாண்மை செய்கையில் 6000 ஏக்கருக்கும் அதிகமாக செய்கை பண்ணப்பட்டுள்ளன.

அவற்குள் மண்டூர், வெல்லாவெளி, வேத்துச்சேனை, பாலையடிவட்டை, காக்காச்சிவட்டை, போன்ற பல்வேறு பகுதிகளில் காணப்படும் வயல் நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்த மழை வீழ்ச்சி காரணமாக நவகரி குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் வேளாண்மை செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது வேளாண்மை 70 நாள்கள் பயிராக காணப்படுவதால், குடலைப்பருவத்தில் இருந்து கதிர்பருவத்திற்கு மாறும் இவ்வேளையில் இவ்வாறு அதிகரித்த மழை வீழ்ச்சி மற்றும் குளங்களிலிருந்தும் நீர் திறந்து விடப்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளத்தால் தாம் பாதிக்கப்பட்டு மீண்டௌ முடியாத நிலையில் இருக்கும் வேளையில் இவ்வருட ஆரம்பத்திலேயே அடுத்த வெள்ளமும் தம்மை அதிகம் பாதித்துள்ளதாகவும் விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

நெல்லுக்கான உத்தரவாத விலையை இன்னும் நிர்ணயிக்காத நிலையில் தாம் எதிர்பார்த்த விழைச்சலை பெறுவதிலும் சிக்கல் நிலவுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

# முன்னணி வயலின் இசைக் கலைஞர் சண்முகநாதன் திபாகரன் மறைந்தார்



இலங்கையின் முன்னணி வயலின் இசைக் கலைஞர் ’இசைக் கலைமணி’ சண்முகநாதன் திபாகரன் நேற்று (புதன்கிழமை) காலமானார்.

கொழும்பு கட்புல அரங்காற்றுகை கலைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றிய இவர், யாழ். இராமநாதன் நுண்கலைக் கழகப் பட்டதாரி ஆவார்.

உரும்பிராயை பிறப்பிடமாகக் கொண்ட இவர் இணுவில் கிழக்கு மஞ்சத்தடி மற்றும் கொழும்பில் வசித்து வந்தார்.

பல்வேறு இசைக் கச்சேரிகள், நாட்டிய நிகழ்வுகள், பரதநாட்டிய அரங்கேற்றங்களில் வயலின் இசைக்கலைஞராக சிறப்புற பங்குபற்றிய சண்முகநாதன் திபாகரனின் மறைவுக்காக கலைஞர்களும் பல முக்கியஸ்தர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறப்பு

## மக்கள் அவதானம்

மாங்குளம் கனகராயன் குளம் ஆகிய பிரதேசங்களில் பெய்து வருகிற கனமழை காரணமாக இரணைமடு குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப் பட்டுள்ளன.

எனவே குளத்தின் கீழ்பகுதியில் வாழுகின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகின்றமையால் மாவட்டத்தில் உள்ள சிறு குளங்கள் கனகாம்பிகைகுளம், வன்னேரிகுளம், பிறமந்தனாரு குளம் ஆகியன வான் பாய ஆரம்பித்துள்ளன.



# அறிவித்தல்

(தில்சாத் பர்வீஸ்)

நேற்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் சேனநாயக்க சமுத்திரத்தில் இருந்து மேலதிக நீர் வெளியேற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மல்கம்பிட்டி பிரதேசம் உட்பட கல்லோயா ஆற்றினை அண்மித்துள்ள பொதுமக்களை அவதானமாக இருக்கும்படி கேட்டுக் கொள்வதோடு, தொழில் நிமித்தம் வயல்வேலை உட்பட ஏனைய நடவடிக்கைகளுக்கு செல்பவர்கள் அவதானமாக செயற்படவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

# இலங்கைக் காலநிலை பற்றிய நாடாளுமன்ற ஒன்றியத்தின் இணைத் தலைவர்களாக சஜித் மற்றும் அபேவிக்ரம தெரிவு





பத்தாவது நாடாளுமன்றத்தின் இலங்கைக் காலநிலை பற்றிய நாடாளுமன்ற ஒன்றியத்தை மீண்டும் ஸ்தாபிப்பது தொடர்பான கூட்டம் 2025.01.08ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போது ஒன்றியத்தின் இணைத் தலைவர்களாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்போது, ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலீன் பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசித நிரோஷண எகொட வித்தான ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், இணை அமைப்பாளர்களாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜேரத்ன மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இங்கு உரையாற்றிய ஒன்றியத்தின் இணைத் தலைவர்கள், முழு உலகமும் காலநிலை மாற்றம் தொடர்பில் கவனம் செலுத்தும் காலப்பகுதியில் காலநிலை மாற்றத்தினால் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் அதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்காலத்தில் கூட்டாகக் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தனர்.






# தேசிய மட்டக் கபடிப் போட்டியில் அல்-அஷ்ரக் கபடி அணிகள் மீண்டும் வரலாற்றுச் சாதனை

(அஷ்ரப்கான்)

கல்வி அமைச்சுடன் இலங்கை பாடசாலை கபடி சங்கம் இணைந்து நடத்திய கபடி போட்டிகள் 2025-01-11,12,13,14 ஆம் திகதிகளில் 14, 16, 20 வயது கபடி அணிகளுக்கிடையே போட்டிகள் யாவும் கேகாலை வித்தியாலயம் மற்றும் கேகாலை சென்ட் ஜோசப் மகளிர் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 14, 16, 20 ஆகிய மூன்று வயது பிரிவு அணிகளும் பங்குகொண்டு மூன்று அணிகளும் வெற்றி வாகை சூடி, பாடசாலைக்கு தேசிய ரீதியில் பெருமை சேர்த்துள்ளனர்.

இதில் 16 வயதுப் பிரிவு அணியினர் 'கோல்ட் மெடல்' பெற்றதோடு, 14 மற்றும் 20 ஆகிய வயதுப் பிரிவு இரு அணிகளும் 'பிரவுன் மெடல்' பெற்றுள்ளனர்.

மேலும் 16 வயது பிரிவில் பெஸ்ட் பிளேயர் அவாட் விருதை மாணவன் ஏ.ஆர்.முஹம்மட் அன்ஸக் பெற்றார்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு மாணவர்களை பயிற்றுவித்து அழைத்துச் சென்று வழிப்படுத்திய பிரதம கபடி பயிற்றுவிப்பாளர் ஆசிரியர் எஸ்.எம்.இஸ்மத், அர்ப்பணிப்புடன்



செயற்பட்ட சிரேஷ்ட கபடி வீரர்களான கே.எம்.நாபீஸ், எம்.எச்.அபாத், ஏ.ஆர். ஏ.ஜூமான், எம்.எச்.எம்.சத்தார், எஸ்.எம். ஸபிஹான் மற்றும் ஏ.சமீன் உட்பட ஆசிரியர்களான ஏ.ஹலீம் அஹமத், எம்.ஐ.எம்.அஸ்மி ஆகியோருக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கும் நலன்விரும்பிகளுக்கும் வழிகாட்டலையும் ஆலோசனைகளை வழங்கிய எங்கள் பாடசாலை முதல்வர் ஏ.அப்துல்கபூர், இணைப்பாடவிதானத்துக்கு பொறுப்பான உதவி அதிபர் எம்.எம்.உவைஸ் ஆகியோருக்கும் அல்-அஷ்ரக் பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றது.



உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.01.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி



JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY


340, Pointpedro Road, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சியில் பட்டிப்பொங்கல்

பட்டிப்பொங்கல்தினமான நேற்றுதமதுவாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக விளங்கும் கால்நடைகளுக்கு பொங்கல் பொங்கி நன்றி செலுத்தினர்.

கிளிநொச்சியிலும் சீரற்ற காலநிலையையும் பொருட் படுத்தாது தமது கால்நடை



களுக்கு நன்றி செலுத்தினர்.
113





# கிழக்கு மாகாண சபை பொங்கல் விழா நிகழ்வு

(ஹலால்தீன் )

கிழக்கு மாகாண சபையின் கலாசாரத் திணைக்களத்தால் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட தைப்பொங்கல் விழா வேலூர் கிராமத்தில் இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேசசெயலாளர்பிரிவில்உள்ளவேலூர்மிட்சு மீள்குடியேற்ற கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோவிலில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவின் தலைமையில் நடைபெற்றது.

இதில்கிழக்குமாகாணஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதன் உட்பட அதிகாரிகள் மற்றும் பிரதேச வாசிகள் கலந்துகொண்டனர்.

இந்து கலாசார பழக்கவழக்கங்களின்படி மத சடங்குகள் மற்றும் பண்டைய பழக்கவழக்கங்கள் இங்கு செய்யப்பட்டன, அதைத் தொடர்ந்து ஒரு சிறிய விழா நடைபெற்றது.









# சிலோன் மீடியா போரத்தினால் ஊடகவியலாளர் கௌரவிப்பு

(அபு அலா

சிலோன் மீடியா போரத்தின் 5 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவும், இலங்கை நிர்வாக சேவை ஆளுமைகள் மற்றும்

சிறந்த ஊடகவியலாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் நிந்தவூர் அட்டப்பளம் தோம்புக்கண்ட சுற்றுலா விடுதியில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

போரத்தின் தலைவர் ரியாத் ஏ மஜீட் தலைமையில்இடம்பெற்றஇவ்விழாவுக்கு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம்.அப்துல்லாஹ் பிரதம அதிதியாகவும், போக்குவரத்து நெடுச்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் வி.ஜெகதீஸன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவின்போது சிலோன் மீடியா போரத்தின் மட்டு. மாவட்ட இணைப்பாளரும், வீரகேசரி சிலாமுனை நிருபருமான திருமதி துஷ்யந்தி சுரேஸ் (மட்டு. துஷாரா) பாராட்டப்பட்டு



அவருக்கு நினைவுச் சின்னம் மற்றும் பரிசில் போன்றவற்றை பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்த திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம். அப்துல்லாஹ் வழங்கி கௌரவித்தார்.

ஊடகவியலாளர் திருமதி துஷ்யந்தி சுரேஸ்(மட்டு.துஷாரா)ஆயுர்வேதம்மற்றும் அலோபதி வைத்தியம் தொடர்பான மருத்துவ கட்டுரைகள், செய்திகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய தகவல்களை தொடராக எழுதி வருகிறமைக்காக இந்த கௌரவம் வழங்கி வைக்கப்பட்டதும், தேசிய ரீதியாக கௌரவிக்கப்பட்ட ஒரே பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அறுவடைக்கு ஓரிரு நாள்கள் இருந்த நிலையில் ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கின

முல்லத்தீவு மாவட்டத்தின் உடையார் கட்டு கமநல சேவை பிரிவுக்குற்பட்ட நெத்தலியாறு பகுதியில் 2024 ஆம் ஆண்டுக்கான பெரும் போக நெற்செய்கையில் ஈடுபட்ட ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான வயல் நிலங்கள் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த வேலை தற்பொழுது ஏற்பட்டுள்ள மழையுடனான காலநிலை காரணமாக முற்று முழுதாக நீரில் மூழ்கியுள்ளன.

அறுவடை செய்வதற்கு ஓரிரு நாள்களே இருந்த நிலையில் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும்நோய்தாக்கம்காரணமாகமிக அதிகமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நெற் கதிர்கள் முற்றுமுழுதாக நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளதாகவும்தொடர்ச்சியாக விவசாயிகள் மாத்திரமே அனைத்து வகையிலும்பாதிக்கப்படுவதாகவும் சிலர் தமதுநகைகளைவங்கிமற்றும்தனியாரிடம் அடகு வைத்து இம்முறையாவது அதை மீட்டெடுக்கலாம் என எண்ணி இருந்ததாகவும் அதுவும் கைகூடாத நிலையில் தற்பொழுது என்ன செய்வது என்று அறியாத நிலையில் தாம் பெரும் கவலையில் இருப்பதாகவும் இது தொடர்பாக அரசாங்கம்தமக்கு ஏதேனும் ஒரு வகையில்விவசாயிகளின் வாழ்வாதாரத்தைகாப்பாற்றுவதற்கு உதவி செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.



## எதிர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் பணியகத்துடன் இணைந்ததாக ஊடக மற்றும் ஆய்வுப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதுடன், அந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து தொழிற்சங்கங்களின் வினைத்திறனான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

2025 வரவு செலவுத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போதான பிரதான விவாதம் மற்றும் குழுநிலை விவாதத்தின்போது சாதகமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதே இதன் பிரதான நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

"நாடாளுமன்றத்தில் சரியான தகவல்களின் அடிப்படையில் விவாதங்களில் பங்களிப்பதன் முக்கியத்துவத்தையும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் பங்கேற்பு செயல்முறையின் முக்கியமானது. வரவு செலவுத் திட்ட விவாதத்திற்கு மட்டுப்படுத்தப்படாமல் நாடாளுமன்ற அமர்வுகளுக்கும் தொழிற்சங்கங்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதன் மூலம் மக்கள் மயமான எதிர்க்கட்சி ஒன்றின் கடமை பொறுப்பை நிறைவேற்ற முடியும்" என்று எதிர்க் கட்சித் தலைவர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்து எதிர்க்கட்சிகளின் பிரதான அமைப்பாளர் கருத்து தெரிவிக்கையில், நாடாளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சியின் தரத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவதற்காக தொழிற்சங்கங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமாகும் எனத் தெரிவித்தார்.

வரவு செலவு திட்ட விவாதம் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் பணியிடம் ஊடாக சமூக ஊடக வலைத்தளங்களுக்கு 'வரவு செலவு திட்ட விவாத்தின்போது பிரஜைகள் உங்களின் கருத்துக்களுக்கு இடம்கொடுக்க எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் தயார்' என்ற வேலைத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வட்சப் (0759570570 ) மற்றும் மின்னஞ்சல் முகவரி connect@oloparliament.gov.யிவ ஊடாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம், இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே என்ற முகவரிக்கு எழுத்து மூலமும் கருத்துக்களை அனுப்ப முடியும் என நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்-அமெரிக்கர்களின் வளமான மற்றும் தனித்துவமான கலாசாரம் மற்றும் நம்பமுடியாத சாதனைகள் மீது வெளிச்சம் போடும் என்று நான் மனதார நம்புகிறேன். தமிழ் -அமெரிக்கர்கள் சமூகங்களில் ஏற்படுத்திய தாக்கத்தை அங்கீகரிக்க, தீர்மானத்தை விரைவாக எடுக்குமாறு வலியுறுத்துகிறேன்" என்றார்.

இத்தீர்மானத்துக்கு பல்வேறு தமிழ் அமைப்புகள் வரவேற்பு தெரிவித்துள்ளன. தமிழ்- அமெரிக்கர்கள் ஐக்கிய பி.ஏ.சி. அமைப்பு கூறும்போது, "பண்டைய தமிழ் மக்களின் வளமான வரலாற்றையும் நவீன உலகிற்கு அவர்கள் அளித்த விலைமதிப்பற்ற பங்களிப்புகளையும் இத்தீர்மானம் எடுத்துக்காட்டுகிறது" என்றது. வட அமெரிக்காவின் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு கூறும்போது, "பெருமைமிக்க தமிழ்-அமெரிக்கர்களாக, தமிழ்மொழி மற்றும் பாரம்பரிய மாதத்தை உருவாக்குவதற்கான பிரதிநிதி கிருஷ்ண மூர்த்தியின் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்" என்று தெரிவித்தது.

அதேபோல் அமெரிக்க தமிழ் நடவடிக்கைக் குழு கிருஷ்ணமூர்த்திக்கு நன்றி தெரிவித்ததுடன், தீர்மானத்தை உரிய வேகத்தில் நிறைவேற்றுமாறு நாடாளுமன்றத்திடம் வலியுறுத்தியுள்ளது.

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான நீண்டகால மற்றும் வலுவான பாதுகாப்பு ஒத்துழைப்பு உட்பட இரு நாட்டு மக்களுக்கிடையிலான வலுவான தொடர்புகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதி அமைச்சர், இந்தியாவின் தொடர்ச்சியான இராணுவ உதவிகளுக்கும் இதன் போது நன்றி தெரிவித்தார்.

போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இந்தியாவின் ஆதரவை பிரதி அமைச்சர் பாராட்டி, இப்பிரச்சினையை எதிர்த்துப் போராடுவதற்கான பரஸ்பர உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

## இஸ்ரேலியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கு விசா வழங்குவதை இலங்கை நிராகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இலங்கையில் இஸ்ரேலிய பிரைஜகள் தொடர்பான அவதானங்களும் சமூக நல்லிணக்கத்திலும் தேசிய பாதுகாப்பிலும் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படும் பாதிப்பும் என்ற தலைப்பில் தேசிய ஷூரா சபையின் பொதுச்செயலாளர் ரஷீத் எம். இம்தியாஸ் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கணிசமான சிவில் அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய சிவில் அமைப்புகளின் உயர் மட்ட அமைப்பான தேசிய ஷூரா சைப, அண்மைக் காலமாக நாட்டிற்குள் வரும் இஸ்ரேலிய பிரைஜகள் குறித்தும் சமூக நல்லிணக்கம், தேசிய நலன்; மற்றும் தேசிய பாதுகாப்பில் அந்த விவகாரம் ஏற்படுத்த முடியுமான தாக்கங்கள் குறித்தும் தனது கவைலகைள தெரிவிக்க விரும்புகிறது.

கட்டுப்பாடுகளற்ற சுற்றுலாத்துறையினால் கிடைக்கும் பொருளாதார நன்மைகைளயும் வெளிநாட்டுப்; பிரைஜகள் இலங்கைக்குள் வருவதற்கான உரிஷ்மையயும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.ஆனால், இஸ்ரேலிய இராணுவத்தில் பணியாற்றிய மற்றும் பணியாற்றுபவர்கள் சுற்றுலாப் பயணிகளாக இங்கு வருவது பல்வேறு காரணங்களுக்காக ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

1. இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு எதிரான சர்வேதசத்தின் கண்டனம்:

தற்போதைய மத்திய கிழக்கு மோதல்களில் இஸ்ரேலிய இராணுவத்தினால் மேறெகாள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் ஐக்கிய நாடுகள் சைப உள்ளடங்கலான சர்வேதச சமூகத்தின் பரவலான கண்டனத்திற்கு உட்பட்டுள்ளன. நிராயுதபாணிகளான பலஸ்தீன பொதுமக்கைள குறிவைத்து மேற்கொள்ளப்படும் இந்த மோதல்ளும் அத்துமீறல்களும் அம்மக்கைள துன்பத்திற்கும் இடப்பெயர்வுக்கும் ஆளாக்கியுள்ளதுடன், சர்வேதச ரீதியிலும் இலங்கை மக்களிடமும் பலத்த அதிர்வைலகைள அவை உருவாக்கியுள்ளன.

2. பாலஸ்தீன் விவகாரம் குறித்த இலங்கையின் நிலைப்பாடு:

இஸ்ரேல்-பாலஸ்தீன் மோதலுக்கு அமைதியான தீர்விைனயும் இருநாட்டு தீர்வின் அடிப்பைடயிலான சுயாதீன பாலஸ்தீன தேசத்தை அமைப்பைதயும் இலங்கை தொடர்ந்து ஆதரித்து வருகிறது. எனினும் இஸ்ரேல் பாராளுமன்றம் 2024 ஜூலை 18 ஆம் திகதி பாலஸ்தீன தேசம் உருவாக்கப்படுவைத மறுத்து ஒரு தீர்மானத்தை நிஷ்றேவற்றியது. இந்த உத்தியோகபூர்வ நிலைப்பாடும் பாலஸ்தீனத்தை முற்றாக அழித்துதொழிக்கும் இஸ்ரேலிய இராணுவத்தினரின் வருகையும் நாட்டு பிரைஜகள் மத்தியில் பாரிய அதிருப்தியை தோற்றுவிக்கின்றது.

3. குற்றச்சாட்டுக்கள் மற்றும் பாதுகாப்பு குறித்த கவைலகள்:

கடந்த காலங்களில் இஸ்ரேல் எமது அரச பைடகளுக்கு ஆயுதப் பயிற்சிகைள வழங்கிய ஹிவைள, ஒரே நேரத்தில் விடுதைலப் புலிகளுக்கும் இராணுவப் பயிற்சிகைள வழங்கியிருந்தைத நாம் நினைவிற் கொள்ள வேண்டும். தற்போது சில இஸ்ரேலிய பிரைஜகள் விஸா காலம் முடிவைடந்த பின்னரும் அத்துமீறி தங்கியிருப்பதாகவும், நிலங்கள் மற்றும் சொத்துக்கைள வாங்குவதாகவும், அங்கீகரிக்கப்படாத வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், சட்டவிரோத மத கட்டைமப்புகைள நிர்மாணிப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. அஹிதேவைள இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் 'மன அழுத்தங்கைளப் போக்குவதற்கான' சுற்றுலாக்களும் அவர்களின் இராணுவ ஹிைசவக்கு ஊக்கமளிப்பதும் சமூகத்திற்குள்ளால் பல்வேறு அதிருப்திகைள ஏற்படுத்தியுள்ளன.

4. சமூக அமைதிக்கு பங்கம் ஏற்படும் சாத்தியம்:

இந்த விவகாரத்தின் உணர்வுபூர்வ நிஷ்லையப் பயன்படுத்தி தவறான நடத்தைகைளக் கொண்டோர் சமூக அமைதிக்கு பங்கம் விளைவிக்கவும் இலங்கையின் பன்மைத்துவத்துக்கு சவால் விடும் வைகயில் சமூக நல்லிணக்கத்திற்கு தீங்கிழைக்கவும் முற்படலாம்.

5. மேலும், கடந்த கால அனுபவங்களின் அடிப்பைடயில் பிராந்திய புவிசார் அரசியல் சக்திகள், வெளிநாட்டு நலன்கள், இஸ்லாமிய வெறுப்பு மற்றும் சுயநலம் மற்றும் அரசியல் உள்நோக்கங்களால் உந்தப்படும் சில உள்நாட்டு சக்திகள் இலங்கை விடயமாக ஹிதைவயற்ற செல்வாக்கைசெலுத்தலாம். கடந்தகாலங்களில் வங்குரோத்து நிலையிலிருந்த நாட்டை மீட்க மேற்கொள்ளப்படும் முயற்சிகைள இவை சீர்குலைக்கக்; கூடும் என்பைத நாங்கள் அறிவோம். கடந்த காலங்களில் இன மோதல்கள் மற்றும் தவறான தகவல் பரப்புரைகைள மேற்கொண்ட நபர்கைளப் பற்றி மாண்புமிகு உங்களுக்கு நன்கு தெரியும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த முக்கியமான சூழ்நிஷ்லைய வெளிச் சக்திகள் தமது சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பைத உறுதிசெய்வதன் மூலம், இந்த விஷயத்தில் நாம் மிகவும் விழிப்புடன் இருப்போம் என்றும் நம்புகிறோம்.

6. இவற்றின் அடிப்பைடயில் தேசிய ஷூரா சைப பின்வரும் கோரிக்கைகைள விடுக்க விரும்புகிறது:

(அ) குற்றச்சாட்டுகைள விசாரித்தல்: இலங்கைக்கு வந்த இஸ்ரேலியர்களுக்கு எதிராக ஏற்கனேவ கூறப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக பொதுக் களத்தில் உள்ள பல குற்றச்சாட்டுகள் முன்னுரிமை அடிப்பைடயில் மற்றும் தேசிய நலன் கருதி விசாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) இஸ்ரேலிய வீரர்களுக்கான விசாவை நிராகரித்தல்: தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் குடிமக்களின் சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பவும், உளவுத்துறை ஹிைசவகள் மற்றும் இஸ்ரேலின் ஆயுதப்பைடகளில் பணியாற்றும் அல்லது பணியாற்றிய நபர்களுக்கு விஸாவை இஸ்ரேலிய பாலஸ்தீனம் போர் முடியும் வைர நிராகரித்தல்.

(இ) விசா விண்ணப்பங்களின் ஆய்வுகைள மேம்படுத்துதல்: குடியேற்ற விதிமுறைகள் மற்றும் தேசிய பாதுகாப்பு நலன்களுக்கு இணங்குவைத உறுதி செய்வதற்காக இஸ்ரேலிய நாட்டினரிடமிருந்து விசா விண்ணப்பங்களுக்கு கடுமையான சோதைன நைடமுறைகைள செயல்படுத்தல்.

(ஈ) சுற்றுலா நடவடிக்கைகைளக் கண்காணித்தல்: அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் மற்றும் சமூக அமைதியின்ஷ்மையத் தூண்டக்கூடிய எந்தெவாரு நடத்தை உட்பட அனைத்து சட்டவிரோதச் செயல்கைளயும் தடுக்க சுற்றுலா நடவடிக்கைகளின் கண்காணிப்பை அதிகரித்தல். இவற்றுடன் இலங்கை தேசிய பாதுகாப்பையும் சமூக ஒற்றுஷ்மையயும் பாதுகாக்க வேண்டிய முக்கியத்துவமும் உள்ளது.

7. சமநிலையான சர்வேதச உறவுகைளப் பேணுதல் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நாங்கள் அங்கீகரிக்கிறோம். எவ்வாறாயினும், தேசிய பாதுகாப்பு, சமூக நல்லிணக்கம் ஆகியவற்றைப் பாதுகாப்பதும் இலங்கையின் விழுமியங்கைள நிலைநிறுத்துவதும் அஹிதேபால் முக்கியமானதாகும்.

8. மாண்புமிகு நீங்கள் இந்த எமது கரிைசனகைள உரிய முைறயில் பரிசீலித்து அவற்றை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகைள எடுப்பீர்கள் என நம்புகிறோம். இக்கோரிக்கைகளுக்கான உங்களது பதிலை தேசிய ஷூரா கவுன்சிலுக்கு நீங்கள் தரும் பட்சத்தில் அதன் 12 உறுப்பு அமைப்புகளுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் அதைன எமக்கு எத்திவைக்க முடியும் என்றுள்ளது.






# மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டது

(கேதீஸ், கிஷாந்தன்)

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

லிந்துலைநோனாவத்தைஹில்டனோல் தோட்டத்தை பிறப்பிடமாகவும் தலவாக்கலை மட்டுக்கலை தோட்டத்தில் பணிபுரியும் இராமையா பாரதிராஜா (வயது 40) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா நீதிமன்ற நீதிபதி சடலத்தை பார்வையிட்டதன் பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததலவாக்கலை பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை



மேற்கொண்டு வருகின்றனர்.

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் சம்மாந்துறை நைனாகாட்டில் கைது

(ஹமீட், தில்சாத் பர்வீஸ்)

வீட்டிற்கு அருகிலுள்ள தொட்டில் பாலம் எனும் இடத்தில் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு விற்பனைக்காக இருந்த கசிப்பையும் சம்மாந்துறை பொலிஸ் சுற்றுச்சூழல் பிரிவினர் கைப்பற்றி உள்ளனர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை இரவு 08.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நைனாகாடு பிரதேசத்தில் கசிப்புடன் திங்கட்கிழமை இரவு 08.30 மணியளவில் சம்மாந்துறை சுற்றுச்சூழல் பிரிவினரால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறைசுற்றுச்சூழல்பிரிவினருக்கு கிடைக்கப்பெற்றதகவலின்அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது நைனாகாடு பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து ஒருதொகை கசிப்பு மீட்கப்பட்டதுடன்,சந்தேகநபர்உள்ளிட்டசான்றுப் பொருள்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கையானது, சம்மாந்துறை பொலிஸ் நிலையசுற்றுச்சூழல்பிரிவுபொறுப்பதிகாரி ஏ. நஸார், தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர் எம்.ஏ. பாரூக் உள்ளிட்ட அதிகாரிகள்இச்சோதனைநடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மூன்றாவது ஆண்டு நிறைவாண்டும் நியமன ஆணைப்பத்திரம் வழங்கலும்

(ஸாகிர்)

மனிதமேம்பாட்டுஅமைப்பு ஸ்ரீலங்காவின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா ரிலெக்ஸ் பூங்காவில் நடைபெற்றது.



இந்நிகழ்வானது அமைப்பின் பணிப்பாளர்எஸ்.ஏ.முஹம்மட் அஸ்லமின் தலைமையிலும் செயலாளர் ஐ. பாத்திமா நஸ்லாவின்ஒருங்கிணைப்பிலும் நடைபெற்றது.

இந்நிழ்விற்குஅம்பாறைமாவட்டஅரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப் பாளர் ஐ.எல்.எம். இர்பான், அமைப்பின் ஆலோசகர்களான மேஜர் கே.எம். தமீம், கெப்டன். எம்.டி. நௌஷாத், எம்.அஸீஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.எம். சம்சுதீன், எம்.எஸ்.அகமட், சிராஜூன் முனீரா, அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள் என பலரும் பங்கேற்றனர்.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளாக அமைப்போடு இணைந்து பனியாற்றிய அமைப்பின் பிரதேச அமைப்பாளர்கள், துறை சார்ந்த தலைவர்கள், உயர்பீட உறுப்பினர்களுக்கு நியமன ஆணைப்பத்திரம், அடையாள அட்டை, உத்தியோகபூர்வ சீருடை அறிமுகம் செய்து வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# 'ஐஸ்' வைத்திருந்த இளைஞன் கைது

(பாறுக் ஷிஹான்)



ஐஸ் போதைப்பொருள் தம் வசம் வைத்திருந்த இளைஞனை கைது செய்து சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் பாடசாலைக்கு அருகில் திங்கட்கிழமை இரவு இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 18 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ஒரு தொகை ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் உள்ளிட்ட சான்றும் பொருள்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் குறித்த சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பதிகாரி ஏ. நஸார் தலைமையிலான பொலிஸார் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நற்பிட்டிமுனையில் குருதிக்கொடை முகாம்

(பாறுக் ஷிஹான்)

'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' என்ற தொனிப் பொருளின் அடிப்படையில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையுடன் இணைந்து நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் சுகாதாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்தான முகாம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நற்பிட்டிமுனை கமு/கமு/அல்-அக்ஸா மத்திய மகா வித்தியாலய ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் வீ.ரீ.கனூன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் இரத்ததான முகாமில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் மற்றும் சக உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

இம் மாபெரும் இரத்ததான முகாமில் நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் உயர்பீட உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மின்சாரம் துண்டிப்பு

## குளிரூட்டப்பட வேண்டிய தடுப்பூசிகள் காலாவதியாகுமா?

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு பாதுகாப்பாக குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட முடியாத நிலைக்குச் செல்லுமா என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மின்சார கட்டணம் செலுத்தப்படாத நிலையில் நேற்று (புதன்கிழமை) காலை மின்சார சபை ஊழியர்களால் குறித்த அலுவலகத்துக்கான மின் துண்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக அங்கு மின்சாரம் தடைப்பட்டதோடு மின் பிறப்பாக்கி மூலம் மின்சாரத்தை வழங்குவதற்கு ஏதுவான சூழல் காணப்படாமையால் மின் பிறப்பாக்கி மூலமாகவும் மின்சாரம் வழங்கப்படவில்லை. இந்நிலையில் அங்கு கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கான தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த ஊசிகள் சில குளிரூட்டிகளில் வைக்க வேண்டிய நிலைமை காணப்பட்ட போதிலும் மின் துண்டிக்கப்பட்டமையால் அவை பழுதடைந்து விடுமா என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே, இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்து குறித்த தடுப்பூசிகளை பாதுகாக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த அலுவலகத்திற்கான மின் கட்டணம் நீண்ட காலமாக செலுத்தப்படாமைக்கான காரணம் என்ன என்பது தொடர்பிலும் உரிய அதிகாரிகள் விசாரணை நடத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

100

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(ஹாரீஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரனின் வழிகாட்டலுக்கமைவாக நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ள மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு அண்மையில் மத்திய முகாம்-01 பல்தேவைக்கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் யூ.எல். ஹபீலா மற்றும் கள உத்தியோகத்தர் ஆர்.அனுஷ்கா ஆகியோரும் மத்திய முகாம் 04 கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் டெ. றொசாயிறோ நிகழ்வில் கலந்து கொண்டு பெண்களின் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பாகவும், சமூகத்தில் அவர்களுக்கான அந்தஸ்து என்ன என்பது தொடர்பான தெளிவூட்டல்களை மகளிர் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வுக்கான பூரண அனுசரணையை முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியாவில் பாரம்பரிய முறைப்படி மாவட்ட செயலரால் அறுவடை ஆரம்பம்



வவுனியாவில் பாரம்பரிய முறைப்படி மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத்சந்திரவால் நெல் அறுவடை நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் பொங்கல் விழா 2025 இன்று(வியாழக்கிழமை)நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு குறித்த பொங்கலிற்கான அரிசிக்கான, நெல்லினை பெற்றுக்கொள்வதற்கான சம்பிரதாய நிகழ்வானது வவுனியா தாண்டிக்குளத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது நெல் வயலில் இறங்கி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திரவினால் பாரம்பரிய முறைப்படி நெல் அறுவடை செய்யப்பட்டு வவுனியா கந்தசுவாமி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் மற்றும் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கோவில்குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை இன்று கந்தசாமி ஆலயத்தில் இருந்து குறித்த நெல் கதிர்கள் மாவட்டச் செயலகத்திற்கு கொண்டுவரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 100










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.01.2025இல் வெளியிடப்பெற்றது